RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1813

OPEN ACCESS

# வானம்பாடிக் கவிதைகளில் அங்கதம்

ஏ. ஞானப் பிரதாப் சிங் [அ, *]

[அ] அ தமிழாய்வுத்துறை, திரு.ஆ.கோவிந்தசாமி அரசு கலைக் கல்லூரி, திண்டிவனம்-604307, தமிழ்நாடு, இந்தியா.

# Satire in Vanampaadi Poems

E. Gnana Pratap Singh [a, *]

[a] Department of Tamil, Thiru. A. Govindasamy Government Arts College, Tindivanam–604307, Tamil Nadu, India

* Corresponding Author: pratapsinghtamil@gmail.com

Received: 01-08-2022
Revised: 28-10-2022
Accepted: 08-11-2022
Published: 08-12-2022

Check for updates

**ABSTRACT**

Due to the westernization of literature many new strategies have been used in Tamil poems. Although many strategies are in use still many new strategies become influential over time. Various kind of strategies are used in the poems of this period but the strategies like, symbol, paradox and so on are used in abundance. During Sangam period satire is used to show the moral values of the protagonist. Scholars rarely use satire in their works. The writers of Vanampadi poems directly mocks the politics, economy, education, justice, spirituality, caste, religion, superstition. Ignorance and hypocrisy. Laws which upholds justice are now corrupted. Now-a-days we can buy education and degrees. Like the proverb 'All that glitters is not gold' fakes are worth more than the real thing today. World is filled with forgeries. Forgeries in object, spirituality, education, politics, medicine, law and so on. People in high positions are not doing their duties because of caste system and religious problems. Vanampadi poets used satire as a literary technique to criticize all these problems. Satire can be seen as the voice of marginalized people to reconstruct society. Satire is a tone of humorous criticism.

**Keywords:** Vanampaadi Poems, Satire, Literature, Politics, Economy, Education

## முன்னுரை

அங்கதம் என்ற சொல்லுக்குப் பழிச்சொல், வசைப்பாட்டு, நகையாடல், விமர்சனம் செய்தல் என்று பொருள். சங்க காலத்தில் ஒருவரின் கீழ்த்தரமானக் குணத்தை அல்லது செயலை ஏளனமாகச் சொல்வதற்கு அங்கதத்தைப் பயன்படுத்தினார்கள். தீங்கையும், அறிவின்மையையும் கேலி செய்ய பயன்படும் ஓர் இலக்கிய உத்தி அங்கதம் ஆகும்.

சமுதாய அவலங்களை மிகத் தீவிரமாக விமர்சனம் செய்தவர்கள் வானம்பாடிக் கவிஞர்கள். மக்களின் நல்வாழ்வுக்கு இடையூறாக இருந்த பலவகைக் கொடுமைகளையும் எதிர்த்துச் சாடிய கவிஞர்களான மீரா, மு. மேத்தா, சிற்பி, ஈரோடு தமிழன்பன் ஆகியோர் இன்றைய வாழ்க்கையின் நடைமுறை அவலங்களை அங்கதப் பாங்கில் கிண்டல் செய்வதை இக்கட்டுரையில் காணலாம்.

## தொல்காப்பியத்தில் அங்கதம்

தமிழ் இலக்கியக் கோட்பாட்டை எடுத்துரைக்கும் மிகச் சிறந்த இலக்கண நூலாசிரியரான தொல்காப்பியரும் அங்கத உத்தியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அங்கதம் தொல்காப்பியர் தொடங்கி இக்காலம் வரை தமிழ் இலக்கியத்தில் இடம்பெற்று வருகிறது.

"பாட்டு உரைநூலே வாய்மொழி பிசியே

அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்"

என்று தொல்காப்பியரால் சுட்டப்படுகின்றன (Tholkappiyar, 2013). தொல்காப்பியர் அடிவரையறை இல்லாத ஆறினை,

"நூலினான உரையினான

நொடியொடு புணர்ந்த பிசியினான

மறைமொழி கிளந்த மந்திரத்தான

கூற்றிடை வைத்த குறிப்பினான"

என்று விளக்குகிறார். இதிலிருந்து பாட்டு என்பது அடிவரையறையோடு கூடியதென்றும், ஏனைய ஆறும் அடிவறையற்ற யாப்பு என்றும் விளக்குகிறார் (Tholkappiyar, 2013). மேலும், அங்கதம் என்பதை கூற்றிடை வைத்த குறிப்பு என்ற தொடரால் விளக்குவதும் குறிப்பிடத்தக்கது. பேச்சினிடையே ஓர் உட்குறிப்பை நிறுத்திக் கூறுதலே அங்கதமாகும் எனக் கருதலாம். எழுத்தும் சொல்லும் தொடர்ந்து நின்று தரும் பொருள்வேறு. அதனால் உணரப்படும் பொருள் வேறு. அதனாலயே அங்கதத்தை விளக்க வந்த தொல்காப்பியர்,

"எழுத்தொடும் சொல்லொடும் புணராதாகிப்

பொருட் புறத்ததவே குறிப்பு மொழிஎன்ப"

என விளக்குகிறார். எழுத்தாலும் சொல்லாலும் வெளிப்படையாகக் கூறாமல் குறிப்பால் புலப்படுத்துவதை அங்கதம் என மொழிகிறார். அங்கதம் இலக்கிய வகைகளில் அடிவரையறைக்குட்பட்ட வெண்பா யாப்பில் அமைந்தது என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார் (Tholkappiyar, 2013).

## அங்கத வகைகள்

அங்கதம் பற்றி விரிவான இலக்கணத்தைக் கூறிய தொல்காப்பியர் அதன் வகைகளையும் எடுத்தியம்புகிறார்.

"அங்கதம் தானே அறில்தபத் தெரியின்

செம்பொருள் கரந்தது எனஇரு வகைத்தே"

என இரண்டாகக் கூறுகிறார் (Tholkappiyar, 2013). செம்பொருள் என்பது வசைச் செய்யுள். பழிகரப்பு என்பது புகழ்வது போல மறைத்துச் சொல்லி கிண்டல் செய்வது.

"செம் பொருளாயின் வசையெனப் படுமே"

"மொழிகரந்து சொல்லின் அதுபழிகரப்பாகும்"

செம்பொருள் என்பதை வசை என்றும் மொழி கரந்து என்பதை பழிகரப்பு என்றும் தொல்காப்பியர் சுட்டுகிறார் (Tholkappiyar, 2013).

## மீரா கவிதைகளில் அங்கதம்

### கல்வி சிறந்த தமிழ்நாடு

கல்வி ஒரு காலத்தில் மாணவர்களுக்கு ஒழுக்கம், அறிவு, திறமை, ஆளுமை, தனித்திறன்கள் வளர ஆசிரியர் மேற்பார்வையில், முறையாக வகுப்பறையில் நேரடிக் கல்வியாகக் கற்றுக் கொடுக்கப்பட்டது. ஆனால், கல்வி இன்றையச் சூழலில் வணிக மயமாக மாறிக்கொண்டு வருவதை,

"பி.யு.சி. யா?
ஒரு நூறு போதும்.
பி. எஸ்சி. பி. எட்
இரு நூறு ஆகும்
எம். எஸ்சி. ஆயிரம்
எம்.பி.பி. எஸ்.
ஏழு ஆயிரம்
இங்கே
சேர வாரும்
செகத்தீரே!"

பள்ளிப் படிப்பா நூறு ரூபாய் கொடுத்தால் போதும், இளநிலை படிப்பா இருநூறு போதும், முதுநிலை படிப்பா ஆயிரம் போதும், மருத்துவப் படிப்பா ஏழு ஆயிரம் போதும். கல்லூரிக்கு வரவேண்டாம். படிக்க வேண்டாம். பணம் கொடுத்தால் போதும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றதற்கானச் சான்றிதழ் கிடைக்கும் நிலை உள்ளது என்பதை கவிஞர் நய்யாண்டியாகக் குறிப்பிடுகிறார் (Meera, 2008).

## முருகனும் முத்தையா பிள்ளையும்

கடவுளை நம்பி மனிதரை அவமதிக்கக் கற்பிக்கும் சிலரின் முகத்தில் ஓங்கி அறையாமல் அறைகிறது இக்கவிதை.

"பட்டை பட்டையாய்ப் பழனி விபூதியை
நெற்றியில் பூசி நெஞ்சில் பூசி
செவியில் பூவைச் செருகிப் பூசை
அறையை விட்டே அசைந்து வருகையில்
முத்தையா பிள்ளை 'முருகா!' என்றார்.
உடனே அவர்முன் ஓடோடி வந்து
'என்ன எசமான் கூப்பிட்டீர்களா?'
என்று கேட்டான் ஏவலாளான்
முத்தையா பிள்ளையின் முகமோ சிவந்தது!
'விடியா மூஞ்சிப் பயலே!
கழுதையே! சனியனே!
அப்பன் முருகனை அல்லவா அழைத்தேன்!
உன்னையா அழைத்தேன், உதவாக் கரையே'
என்றார். சென்றான் ஏவலாளன்.
தலைவாழை இலை தன்னில் பரப்பிய
பலவிதக் காய்கறிப் படையலோடு

எண்ணிக்கையற்ற ஏப்பம் இசைத்தே
ஓய்வு காண உல்லாசமாகச்
சாய்வு நாற்காலியில் திருமேனி சாய்க்கையில்
முத்தையா பிள்ளை 'முருகா!' என்றார்.
உடனே அவர்முன் ஓடோடி வந்து
'என்ன எசமானே கூப்பிட்டீர்களா?'
என்று கேட்டான் ஏவலாளன்
முத்தையா பிள்ளையின் முகமோ எறிந்தது!
அழுகை மூஞ்சிப் பயலே!
கழுதையே! சனியனே!
அப்பன் முருகனை அல்லவா அழைத்தேன்!
உன்னையா அழைத்தேன், உதவாக்கரையே"
என்றார். சென்றான் ஏவலாளன்.
உச்சி இரவு ஒரு மணி இருக்கும்.
'முருகா! முருகா! முருகா!' என்று
பிள்ளைவாள் மாடியில் பெருங்குரல் எழுப்பினார்.
கொல்லையில் அந்தக் குரல் எதிரொலிக்கவே
ஏவலாளன் எழுந்தான் பின்னர்
'என்னையா கூப்பிட்டார் இருக்கா(து)' என்றவன்
உள்ளே போகாமல் உடம்பைச் சாய்த்தான்!
திருட்டுப் பயல்கள் செல்வத்தை எல்லாம்
சுருட்டிக் கொண்டு போகையில் உன்னைக்
கூப்பிட்டேனே! குரல் கொடுத்தேனே!
ஓடி வந்தாயா ஓசையைக் கேட்டு?
தண்டச்சோறு? தடியனே! என்றார்.
முத்தையா பிள்ளை. 'ஐயையோ! நமது
சொத்தையா திருடர் சூறையாடினார்?
அப்பன் முருகனை அல்லவா நீங்கள்
அழைத்திருப்பீர்கள்! அழைத்திருப்பீர்கள்!
என்று பேசாதிருந்தேன்' என்றந்த
ஏழை முருகன் இயம்பினான்!"

முத்தையா பிள்ளை, முருகா முருகா என்று இருமுறை கூப்பிட்டபோது வேலையாள் ஓடிவந்து முன்னே நின்றது, அவருக்குப் பிடிக்கவில்லை. 'ஆண்டவனை அல்லவா அழைத்தேன் போடா சனியனே' என வசைபாடி அனுப்பிவிட்டார். ஒரு நாள் இரவு திருடர்கள் புகுந்துவிடவே, அவர் வேலைக்காரனை 'முருகா முருகா' என்று கூப்பிட்டும் அவன் வரவில்லை. ஆண்டவனும் நேரில்

எழுந்தருளவில்லை. திருடர்கள் கொள்ளையடித்துக் கொண்டு ஓடிவிட்டனர். அப்படியே கடவுள் துணை செய்ய வந்தாலும் மனித வடிவிலே தான் வருவார் என்பதையும் இக்கவிதை போதிக்கிறது (Meera, 2020).

## மு. மேத்தா கவிதைகளில் அங்கதம்

`நீதி ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடின்றி நீதி அனைவருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் சட்டம் இயற்றப்பட்டது'. இன்றைய நிலையில் சட்டம் எவ்வாறு உள்ளது என்பதை கவிஞர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"நியாயங்களின் விலை

இங்கே

அதிகமாகிவிட்டது!

எனவே தான்

ஏழைகளால்

அதை வாங்க

இயலவில்லை

சட்டம் என்பது

வசதி படைத்தவர்களுக்கு

வகுத்துக் கொடுத்த

சௌகரியமாகி விட்டது!"

நியாயம் இங்கே ஏழைகளுக்கு ஒன்றாகவும், பணக்காரர்களுக்கு வேறொன்றாகவும் உள்ளன. நீதி நிதியிடம் விலைப் போகிறது. நீதிமன்றங்கள் இன்று நிதிமன்றங்களாக மாறி வருகின்றன. அதனால் தான் நீதியை ஏழைகளால் வாங்க முடியவில்லை. சட்டம் வசதிப் படைத்தவர்களின் வசதிக்காக உருவாக்கப்பட்டதாக உள்ளன என்பதை கவிஞர் சுட்டிக் காட்டுகிறார் (Metha, 2016).

## சுவரொட்டித் தலைவர்கள்

சங்க காலத்தில் முதல்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என தமிழ் வளர்க்க மூன்று சங்கங்களை நிறுவினர். இக்காலத்தில் கொள்கையே இல்லாமல் புற்றீசல் போல் கட்சித் தொடங்குவதை கவிஞர்,

"ஏராளமான

தலைவர்கள் தினமும்

எழுத்தாய்ப் படமாய்

சுவரில் முளைக்கிறார்.

ஆளே இல்லாத்

தலைவர் ஆயினும்

அலைகடலாய் திரண்டு வர

மக்களை அழைக்கிறார்.

சுவரொட்டித் தலைவர்களை

நாங்கள்

சகிப்பதன் காரணம்

ஒட்டுவோர் எழுதுவோர்

ஒருசிலர் பிழைக்கிறார்”

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களைவிட, தினமும் சுவரில் எழுத்துகளாய், ஓவியமாய், சுவரொட்டியாய் நேற்று பெய்த மழையில் பூத்த காளான்கள் போல் திடீரெனத் தோன்றும் தலைவர்களே அதிகம். தொண்டர்களே இல்லாத தலைவர்கள் ஆயினும் கூட்டத்திற்கு அலைகடலென திரண்டு வாரீர் என சுவரொட்டி விளம்பரம் செய்கிறார்கள். சுவரொட்டித் தலைவர்களை நாங்கள் பொறுத்துக் கொள்வதற்குக் காரணம் சுவரில் எழுதுவோர், ஒட்டுவோர் சிலர் பிழைப்பதனால் இதனைச் சகித்துக்கொள்ள வேண்டியுள்ளது என கிண்டலாக இடித்துரைக்கிறார் (Metha, 2019).

## சிற்பி கவிதைகளில் அங்கதம்

### வாத்தியாரு வேலை

ஆசிரியர் பணி என்பது சமூகத்தில் மதிப்புமிக்க ஒரு பணியாகக் கருதப்பட்ட நிலை இருந்தது. ஆனால், இன்று அத்தகைய நிலை இல்லை என்பதை நகைச்சுவையாகக் குறிப்பிடுகிறார் கவிஞர் சிற்பி.

“மணியடிச்சாப் பணி துவங்கும் வாத்தியாரு வேலை!

மலிவுப் பதிப்பா ஆகிப்போச்சு வாத்தியாரு வேலை!

பெரியமனிதர் மத்தியிலே வாத்தியாரு வந்தால்

பிச்சைக்காரன் என்பதுபோல் ஏளனப் பார்வை!

தெரியலயா தீபாவளி போனஸ் இவருக்கேது?

‘திருமண மார்க்கட்டில்’ இவரைப் பெண்களும் மதிக்காது!”

ஆசிரியர் என்பவர் காலை மணியடிச்சா பள்ளிக்குப் போவதும், மாலை மணியடிச்சா வீட்டுக்கு வருவதுமான சாதாரன வேலை என்றாகிவிட்டது. வசதிப் படைத்த மனிதர்கள் மத்தியில் ஆசிரியர்களுக்கு மரியாதை குறைந்துவிட்டது. பொருளாதாரத்தில் உயர்ந்தவர்கள் ஆசிரியரைப் பிச்சைக்காரன் போல் ஏளனமாகப் பார்க்கின்றனர். மற்ற அரசு ஊழியர்களுக்கு வழங்குவது போல் தீபாவளி போனஸ்கூடக் கிடையாது. திருமணம் செய்துகொள்ள பெண்கள் யாரும் முன் வருவதில்லை, மதிப்பும் இவர்களுக்கு இல்லை என நகைச்சுவையாகக் குறிப்பிடுகிறார் (Sirpi, 2013).

### மருந்தே உணவு

மனிதனுக்கு உணவே மருந்தாக இருந்த நிலைமாறி, மருந்தே உணவாக மாறிய நிலையைக் கவிஞர் பின்வருமாறு இடித்துரைக்கிறார்.

“வடிவம் பல

வட்டம், சதுரம், உருண்டை, நீளம்

வண்ணம்பல

கருப்பு, மஞ்சள், பச்சை, வெள்ளை

சுவைகள் பல

இனிப்பு, கசப்பு, புளிப்பு, துவர்ப்பு

அலோபதி

ஆயுர்வேதம்

ஹோமியோபதி

சித்தா என

மருத்துவம் பல

கி.மு.கி. பி என்பது போல

சா.மு. சா.பி. என

நேரம் பல

தவித்து, தண்ணீர் பருகி

ஓங்கரிப்போடு கண்ணீர் பருகி

தொண்டை மறுக்க

சுவாசப்பை குமுர

விழுங்கி விழுங்கி

என்ன செய்வது?

மாத்திரைகளால்

அளக்கப்படுவது வாழ்க்கை"

சைவ உணவு, அசைவ உணவு மற்றும் பாரம்பரியமான உணவு வகைகளை நாள்தோறும் மூன்று வேளைகள் உண்டு ஆரோக்கியமாக வாழ்ந்த மனிதர்கள் இன்று, துரித உணவு, சுகாதாரமற்ற மற்றும் காலாவதியான திண்பண்டம் போன்ற உணவுகளை உண்பதால் ஏற்படும் நோய்களுக்கு ஆட்பட்டு, பல வண்ணத்தில், பல வடிவத்தில், பல சுவைகளில், ஆயுர்வேதம், ஹோமியோபதி, சித்தா என பல வகை மருந்துகளைச் சாப்பாட்டிற்கு முன், சாப்பாட்டிற்குப் பின் என உண்பது வழக்கமாகிப் போய்விட்டதை நகைச் சுவையாகக் குறிப்பிடுகிறார் (Sirpi, 2013).

## ஈரோடு தமிழன்பன் கவிதைகளில் அங்கதம்

### போலிக் குருமார்கள்

பரம்பொருள் (இறைவன்) மீது வைக்கும் பற்றுதான் பக்தி. இது தடம்புரண்டு பொன் மீதும், பொருள் மீதும், புகழ் மீதும் வைக்கும் போலிப் பக்தியாய் ஆகிவிட்டது. போலிப் பக்தர்களால் போலிக் குருமார்கள் பெருகிவிட்டனர். மக்கள் அறியாமையைப் பயன்படுத்தி, மடங்கள், மாளிகைகள், பெரும் சொத்துகள் என்று வசதி பெருக்கி வாழ்கின்றனர் என்பதை தமிழன்பன் கேலி செய்வதைக் காணலாம்.

'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது பழமொழி. இப்பழமொழி மனிதர்களுக்குத் தெய்வ நம்பிக்கையுள்ள மனிதர்கள் சொன்னது.

"குருக்களே தெய்வங்கள் ஆனார்கள்

கோயில் இல்லா ஊர்களிலே

தெய்வங்கள் குடியிருக்கப் போனார்கள்."

குருக்களின் சுரண்டலும், அதிகார அட்டகாசமும் பொறுக்க முடியாமல், தெய்வங்களே கோயில் இல்லாத ஊர்த்தேடி ஓடிப்போய் விட்டனவாம். தமிழன்பனின் இக்கவிதை எவ்வளவு குறும்பாகச் சுட்டிக் காட்டுகிறது. கோயில் உள்ள ஊருக்குப் போனால் அங்கேயும் துரத்தி வந்துவிடுவார்களோ, இந்தப்

போலிக் குருமார்கள்! என்று இன்றையச் சமுதாய நிலையினை நய்யாண்டியாகச் சுட்டிக் காட்டுகிறார் (Erode Tamilanban, 2008).

## அவனே அறிவான்

பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பத்தைச் சார்ந்தவர்கள் மாங்கல்யத்தைக் கூட அடகு வைத்து பிழைப்பு நடத்த வேண்டியச் சூழலை,

“மாங்கல்ய மகிமையை

மனைவி அறிவாள்

மணாளன் அறிவான்

இவர்கள் இருவரைவிட

மார்வாடியே

அதிகமாய் அறிவான்.”

மாங்கல்யம் அணிவதால் பெண்களுக்கே உரித்தான ஒழுக்கநெறி, பண்பாடு மற்றும் பெருமையை மனைவி அறிவாள். மாங்கல்யம் கட்டியதால் தனக்கானக் கடமையைக் கணவனும் அறிவான். ஆனால், கவிஞர் கணவன், மனைவிக்கு மாங்கல்யத்தின் அருமை, பெருமை தான் தெரியுமே தவிர அதன்மதிப்பு தெரியாது. அதன் விலைமதிப்பு அடகுக்கடைக்காரனே அறிவான் என்பதை இவ்வாறு அங்கதத் தன்மையுடன் விளக்குகிறார் (Erode Tamilanban, 2002).

## முடிவுரை

வானம்பாடிக் கவிஞர்களின் கவிதைகள் சிறப்பையும் வரவழைக்கின்றன, சிந்தனையையும் எழ வைக்கின்றன. மனிதர்களின் போலியான வாழ்வை விமர்சனமும் செய்கின்றன. சமுதாயச் சீர்த்திருத்த நோக்கமும், முற்போக்குச் சிந்தனையும் கொண்ட வானம்பாடிக் கவிஞர்கள் ஆன்மீகம், அரசியல், அநீதி, கல்வி, மருந்தே உணவாக உள்ள நிலை, மூடநம்பிக்கைகள், ஊழல், லஞ்சம், போலிச் சாமியார்கள் போன்ற சமுதாய அவலங்களை அறவழிச் சினம் கொண்டு இடித்துரைத்துள்ளனர். நகைச்சுவை உணர்வோடும், திறனாய்வு முறையிலும், கருத்துக்களை வெளிப்படுத்த அங்கதத்தை ஓர் இலக்கிய உத்தியாகப் பயன்படுத்தியுள்ளனர். அங்கதம் மக்கள் சமுதாய மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. தீங்கையும் அறிவின்மையையும் கண்டனம் செய்வது. மனிதகுலக் குற்றம் கண்டு சினம்கொண்டு சிரிப்பது. அங்கதத்தை ஒரு இலக்கிய உத்தியாகப் பயன்படுத்தி கவிதை இயற்றுவதால் கற்போருடையே ஆர்வத்தையும், வியப்பையும், உணர்ச்சியையும், சிந்திக்கும் ஆற்றலையும் தூண்டலாம்.

## References

Erode Tamilanban, (2002) Thoni Varukirathu, Poompuhar Pathippagam, Chennai, India.

Erode Tamilanban, (2008) Sennimalai Cleopaathraakkal, Pablo Bharathi pathippagam, Chennai, India.

Meera, (2008) Oosikal, Annam Veeliyeedu, Thanjavur, India.

Meera, (2020) Meera Kavithaikal, Annam Veeliyeedu, Thanjavur, India.

Metha, M., (2016) Oru Vanam Iru Siraku, Kavitha Pathippagam, Chennai, India.

Metha, M., (2019) Aakaayathukku Adutha Veedu, Kavitha Pathippagam, Chennai, India.

Sirpi, (2013) Sirpi Kavithaikal, New Century Book House, Chennai, India.

Tholkappiyar, (2013) Tholkappiyam, Saradha Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License